REGD. NO. M. 6311 ★ தனி இதழ் 0—1—0 அணா ★ இலங்கையில் 10 சதம் ★ PHONE: 85630

நம் நாடு

தி.மு.க. தின இதழ் — ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily. ★ The Official Organ Of The D.P.F.

மலர் 4] சென்னை: மாசி 2உ புதன் (13-2-57) ★ ★ வெளியீடு: மாசி 3உ வியாழன் (14-2-57) [இதழ் 212

தேர்தல் போட்டியிலிருந்து விலக கடைசி நாள்

★

மார்ச் 1, 4, 6, 8, 11 ஆகிய தேதிகளில் நடைபெறும் தேர்தலில், போட்டியிலிருந்து அபேட்சகர்கள் தேர்தலுக்கு 10 நாளுக்கு முன்புவரை விலகிக்கொள்ளலாம் என்றும், இந்த விதிப்படி பிப். 19, 22, 24, 26, மார்ச் 1 ஆகிய தேதிகள் தேர்தலிலிருந்து விலகிக்கொள்ள கடைசி நாள் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

காமராசரைவிடத் தமிழ் நாடு பெரியது

எதிர்ப்பு கண்டு கவலைப்படத் தேவையில்லை

அண்ணா கருத்துரை

'எதிர்ப்புகளைக் கண்டு கவலை கொள்ளாதீர்கள்' என்று, கழகத் தோழர்களுக்கு உற்சாகமூட்டினார்கள் அண்ணா அவர்கள்.

'பெரியார் நம்மைத் தாக்கிப் பேசுகிறார் என்பதற்காகத் திருப்பித் தாக்காதீர்கள்' என்று அறிவுரை பகன்றார் அண்ணா.

'காமராசரைவிடத் தமிழ்நாடு பெரியது என்பதை வாக்காளர் உணர வேண்டும்' எனக் கேட்டுக்கொண்டார் அண்ணா.

'பெரியார் காங்கிரசை ஆதரிப்பதால் காங்கிரஸ் வலுப்பெற்றுவிடவில்லை' என்பதை விளக்கினார் அண்ணா அவர்கள்.

சென்னை சிறப்பு மாநாட்டில் அண்ணா அவர்கள் ஆற்றிய கருத்துரையின் முதல் இரு பகுதிகள் ஏற்கனவே வெளிவந்துள்ளன. இறுதிப் பகுதி இங்கு தரப்படுகிறது:—

"காமராசர் கூறினார்—'இந்தத் தி. மு கழகத்தவரை ஒழிக்க எனக்குத் தெரியும்; பெரியாரைக் கொண்டே இவர்களைச் சரிக்கட்டி விடுவேன்'—என்று! நான் அப்போதே கூறினேன்—'இது ஒன்றும் பெரிய இராசதந்திரம் என்று நினைத்துக்கொண்டிருக்க வேண்டாம், காமராசர்; எனக்குக்கூடத் தெரியும் இது; காமராசருக்கு எதிராகக் கரையாளரை ஏவிவிட முடியும்'—என்று! நான் செய்யவில்லை அதனை! ஆனாலும், அது நடந்தே விட்டது! இன்று, 'காமராசர் காங்கிரஸ்—கரையாளர் காங்கிரஸ்' என்று இரண்டு காங்கிரஸ் உண்டாகியிருக்கிறதே!

"நாங்கள் பெரியாரை விட்டு விலகிவந்ததற்கு நியாயமான காரணம் உண்டு நாங்கள் வந்ததில் அர்த்தம் இருக்கிறது. ஆனால், காமராசரைவிட்டு கரையாளர் வந்ததற்கு என்ன காரணம் காட்டப் போகிறார்கள்?

"காமராசர் ஒரு சர்வாதிகாரி—என்று கூறிவிட்டல்லவா, கரையாளர் வெளியேறியிருக்கிறார்?

"வெளியேறியவர்கள் என்னிடம் வந்தார்கள். நான் விரும்பியிருந்தால்......!

"நான் அப்படிக் கிளம்பவில்லை—காமராசரிடமிருந்து வெளியேறியவர்களுடன் சேர்ந்துகொண்டு காமராசரைத் தாக்கக் கிளம்பவில்லை.

"ஆனால் காமராசரோ? பெரியாரைக் கொண்டு தி மு கழகத்தைத் தாக்க நினைக்கிறார்.

கழகத் தோழர்களுக்கு அறிவுரை

'திருப்பித் தாக்காதீர்கள்'

"கழகத் தோழர்களுக்கு ஒன்று சொல்லுவேன்-பெரியார் அவர்கள், நமமைத் தாக்குகிறார் என்பதற்காக நீங்களும திருப்பித் தாக்குகிற வேலையில் ஈடுபடாதீர்கள். என்று பணிவன்புடன் வேண்டிக் கேட்டுக்கொள்ளுவேன்.

"பெரியார் அவர்கள் நாம் வெற்றி பெற்றால், 'இவர்களால் முடிந்ததா? எனது கடந்த 30 ஆண்டுக் கால காங்கிரஸ் எதிர்ப்புப் பிரச்சாரத்தினால்தானே, இவர்களால் வெற்றி பெற முடிந்தது?' என்று கூறுவார்.

"பெரியார் நம்மை மறந்தாலும், நாம் அவரை மறப்பதற்கில்லை. அவர் தந்த சம்பத்து, செல்வம் நம்மிடம் தான் இருக்கிறது. எனவே, நமபிக்கையோடு-பொறுமையோடு, ஆர்வத்திற்கு அணை போட்டுக்கொண்டு, கிடைத்துள்ள நல்ல சூழ்நிலைகளைச் சிறப்பாகப் பயன்படுத்திக் கொண்டு, தேர்தல் வேலையில் ஈடுபடுங்கள் என்று கேட்டுக்கொள்வேன்.

"மக்கள் தெளிவு பெற்று வருகிறார்கள்—உண்மையை உணர்ந்து வருகிறார்கள். நம்மைக் குறித்த அவர்களது அக்கரையும், ஆர்வமும் அதிகமாகி வருகின்றன—நம்முடைய இலட்சியம், கொள்கைகள், திட்டங்கள் இவற்றில்! அவர்களுக்கு நம்பிக்கை வளர்ந்து வருகிறது! இந்த நம்பிக்கையை மேலும் வளர்க்கவும், அக்கரையை அதிகப்படுத்தவும், ஆர்வத்தைப் பெருக்கவும் தேர்தல் பயன்பட வேண்டும். எந்த நிலைகளையும், பொருட்படுத்தாமல் பணியாற்றுங்கள் என்றும் கேட்டுக் கொள்கிறேன்."

டெலிபோன் எண்!

தோழர்கள் என். வி. நடராசன், க. அன்பழகன், மு. கருணாநிதி ஆகியோருக்கு, சென்னையில டெலிபோன் வசதி செய்யப்பட்டிருக்கிறது.

என். வி. நடராசன் 3495
க. அன்பழகன் 61388
மு. கருணாநிதி 85225

தமிழர் தலைவர்களை இலங்கைப் பிரதமர் பண்டா சந்திப்பாராம்!

ஆனால், 'சிங்களம் மட்டுமே' என்ற முடிவு மாறாதாம்!

கொழும்பு, பிப். 12—

சிங்களத்தை மட்டும் ஆட்சி மொழியாக்கும் சட்டம் குறித்து எழுந்துள்ள தகராறுகள் பற்றிப் பேசுவதற்காக இலங்கைப் பிரதமர் பண்டார நாயகா, இலங்கை தமிழ்த் தலைவர்களுடன் பேச்சு வார்த்தை நடத்துவார் என்று தெரியவருகிறது.

இந்தச் சட்டம் தமிழ் மக்களுக்கு ஆத்திரமூட்டியிருக்கிறது என்பதை, அவர்கள் சமீப காலமாக நடத்திவரும் பிரம்மாண்டமான கிளர்ச்சிகள்—சிங்கள மொழி மட்டும் உபயோகிப்பதை எதிர்த்து நடத்தும் கிளர்ச்சிகள் தெளிவாகக் காட்டுகின்றன என்பதால், தமிழர் தலைவர்களுடன் பேச்சு வார்த்தை நடத்துவதென சர்க்கார் முடிவு செய்திருப்பதாகக் கூறப்படுகிறது.

முடிவு மாறாதாம்!

'சிங்களம் மட்டுமே ஆட்சி மொழி' என்ற முடிவு, பேச்சு வார்த்தை நடத்துவதற்கு சர்க்கார் முன்வந்திருப்பதால் மாறிவிடும் என்று கருதக்கூடாது என்றும், பேச்சு வார்த்தைகள், இந்தச் சட்டம் கண்டு தமிழர் கொண்டுள்ள அச்சத்தைத் துடைக்கவே என்றும் விஷயமறிந்த வட்டாரங்கள் கூறுகின்றன.

கூட்டுறவு முறையில் கைநெசவுத் தொழிற்சாலை

மதுரை அருகே நிறுவப்படுகிறது

மதுரை, பிப். 12—

கைத்தறியில்லாத நெசவாளருக்கும், தனிப்பட்ட தொழிற்சாலைகளினின்றும் வேலை இழந்தோருக்கும் வேலை வாய்ப்பளிக்க சென்னை மாநிலத்தில் முதன் முதலாக கூட்டுறவு அடிப்படையில் கைத்தறி நெசவுத் தொழிற்சாலை நிறுவ மதுரை தொழிலியல் நெசவாளர் கூட்டுறவு உற்பத்தி விற்பனைச் சங்கம் திட்டமிட்டிருக்கிறதாம்.

இத்திட்டத்தின் மூலம் நெசவாளர்கள், மாதம் ரூ. 50 சம்பாதிக்க முடியும் என்று எதிர்பார்க்கப்படுகிறதாம்.

இத்திட்டத்திற்குச் செலவாகும் தொகை ரூ. 41,000-ல் பெரும் பகுதியை நீண்ட காலக் கடனாக மத்திய அரசாங்கம் அளிக்குமாம்.

எல்லாத் தறிகளும் நிறுவப்பட்டபின் 60 நெசவாளருக்கும் மற்றுமுள்ள தொழில்களில் 49 பேருக்கும், மேற்பார்வையிட்டு நிர்வகிப்பதற்கு 9 பேருக்கும் இங்கு வேலை அமைக்கப்படுமாம்.

இத்தகவலை, சென்னை நகரத் தென்தொகுதியில் போட்டியிடும் காங்கிரஸ் அபேட்சகர் டி. டி. கிருஷ்ணமாச்சாரி, மதுரை மாவட்டம் செய்யூரில் இன்னைத் துவக்கி வைக்கையில் கூறியுள்ளார்.

பெரியார் ஆதரவால் காங்கிரஸ் வலிவு பெற்றதா?

"பெரியார் காங்கிரசை ஆதரிப்பதால் காங்கிரசிற்கு ஆதரவு வந்ததா? வலிவு வந்ததா?

"பெரியாரைக் காமராசருக்குத் தெரியாது. சில நாளைக்கு முன்பு கூட பெரியார், காங்கிரசைப்பற்றி என்ன கூறியிருக்கிறார்? 'காங்கிரஸ் கழுதையாக இருந்தது; இந்தத் தேர்தலின்போது பன்றியாகியிருக்கிறது; இனி கட்டெறும்பாகிவிடும்' என்று பெரியார் பேசியிருக்கிறார்.

"காமராசருக்கு என்ன தெரியும் பெரியாரைப் பற்றி? எனக்கல்லவா தெரியும்? பெரியார் காங்கிரசை ஆதரிப்பதற்குக் காரணம், உள்ளே இருந்துகொண்டே காங்கிரசை உடைப்பதற்குத்தானே தவிர, வேறெதற்கு? அதனால் தான் நான், பெரியார் அவர்கள் நம்மை எதிர்ப்பதைப்பற்றித் துளியும் கவலைப்படவில்லை.

"நாம் தோற்றால்தான் என்ன? நாம் யாரிடம் தோற்கிறோம்? காங்கிரஸ் நம்மை எதிர்க்கிறது; கம்யூனிஸ்டுகள் எதிர்க்கிறார்கள்; பெரியார் எதிர்க்கிறார்; மற்றவர்கள் எதிர்க்கிறார்கள். இவர்கள் எல்லாம் ஒன்று சேர்ந்தல்லவா நம்மைத் தோற்கடிக்கப் பார்க்கிறார்கள்?

"பெரியார் சொல்லுகிறார்—'காமராசர் மீண்டும் ஆட்சிக்கு வர வேண்டும்' என்று! வாக்காளர்கள் எண்ணிப் பார்க்கவேண்டியது எல்லாம், காமராசரைவிட தமிழ்நாடு பெரியது என்பதைத்தான்!

"நாட்டு மக்களின் ஏர் பிடிக்கும் கரம்தான் செங்கோல் ஏந்தும் கரம்! இந்த நாட்டின் 'தலைவிதி'யை எழுதும் பேனா பிடிக்கும் கரம்! இந்த ஏர்பிடிக்கும் கரங்களைத்தான் தி.மு.க. நம்பியிருக்கிறது.

சென்னை, டில்லி மந்திரிகளுக்குக் கருப்புக் கொடி

நான்கு பேர் கைது செய்யப்பட்ட அக்கிரமம்

தென்காசி, பிப் 11—

'தேவிகுளம், பீர்மேடு பகுதிகளைப் பறிகொடுத்த காமராசரே! திரும்பிப் போ! டி. டி. கிருஷ்ணமாச்சாரியாரே திரும்பிப் போ!'—என்ற முழக்கத்துடன் இந்த வட்டாரத்தில் தேர்தல் பிரச்சாரத்திற்கு வந்த முதன் மந்திரி காமராசர், மத்திய மந்திரி டி. டி. கிருஷ்ணமாச்சாரி ஆகியோருக்கு கருப்புக்கொடி காட்டி, ஆர்ப்பாட்டம் நடத்தியிருக்கின்றனர், பல தோழர்கள்.

மக்கள் கூட்டம் ஒன்று, இவர்கள் தென்காசியிலிருந்து கடையநல்லூர் செல்லும் வழியில் இவர்களது காரை சுற்றி வளைத்துக் கொண்டு, கண்டனக் குரல் எழுப்பியிருக்கிறது.

அங்கிருந்து நம்பிச்செல்லூரையில்; வழி நெடுக இவர்கள் திரும்பும் வரைக்கும் கருப்புக்கொடி ஆர்ப்பாட்டம் நடத்தியிருக்கின்றனர், தோழர்கள்.

இந்த ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட்டதற்காக நான்கு பேர்களை போலீசார் கைது செய்து வழக்குத் தொடுத்திருக்கின்றனராம்.

காங்கிரஸ் எதேச்சாதிகாரம் ஒழிய!

நம் நாடு
தி.மு.க. தின இதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்
சென்னை 13—2—'57 புதன்

காய்ந்தத் தமிழரின் விசித்திரவாதம்!

"வடக்கு நம்மைச் சுரண்டிவருகிறது எனத் திராவிட முன்னேற்றக் கழகம் சொல்லுகிறது. வடக்கில் ஆறு இலட்சம் தமிழர்கள் இருக்கின்றார்கள். அவர்கள் வடக்கிலிருந்து விரட்டியடிக்கப்பட்டுவிட்டால், அவர்கள் கதி என்னவது?"

ஆம்! நியாயமான கேள்வி! கேள்வி, நியாயமானது மட்டுமல்ல — சிக்கலானதும் கூட!

கேள்விக்கு விடை கண்டாக வேண்டும்—இல்லை—கூறியாக வேண்டும்.

கேள்வியின் தரத்தைக் கொண்டு ஒருவர் பதில் கூறத் தயங்கினாலுங்கூட, கேள்வியைத் தொடுத்துள்ளவரின் அந்தஸ்தைக் கருதியாவது விடை கூறத்தான் வேண்டும்.

கேள்வி கேட்டிருப்பவர் சாமானியர் அல்ல—மகாகனமான அமைச்சர் ஆவார்.

அமைச்சர் என்றாலும் சாதாரணமான அமைச்சரல்ல — டில்லி ஆதிபத்தியத்தின் தூண் போன்ற அமைச்சராவார்!

டில்லி ஆதிபத்தியத்தின் தூண் போன்ற அமைச்சராக மட்டுமே அவர் இருந்தாலாவது அவர் கேட்டுள்ள கேள்வியை ஒருவரால் அலட்சியப்படுத்தி விட முடியும்.

ஆனால், பிரஸ்தாப அமைச்சரோ, ஆசிய சோதியின் அன்பையும் ஆதரவையும் அச்சுறுத்திப் பெற்றிருப்பவராவார்.

நாட்டு மக்களை எல்லாம் அச்சுறுத்திக் கொண்டிருக்கின்ற ஆசிய சோதியையுங்கூட அச்சுறுத்திப் பணிய வைக்கக்கூடிய ஆற்றல் படைத்தவர் இந்த அவனியில்—அதிலும் இந்தியத் துணைக் கண்டத்தில் இருக்கின்றாரா, இருக்க முடியுமா, இருந்தால் இன்னமும் அவரை உயிருடன் விட்டிருக்கிறார்களா என்றெல்லாம் அலை அலையாக எண்ணத் தோன்றும் எவருக்கும். ஆனால் உண்மை நிலையோ, ஆசிய சோதியைத் தங்கள் தாளடியில் எப்பொழுதும் வீழ்ந்திருக்கச் செய்யக்கூடிய பேராற்றல் படைத்தவர் இப்பூபாகத்தில் இருக்கிறார் என்பதைத்தான் வலியுறுத்துவதாக இருக்கிறது.

அப்பேராற்றல் படைத்த ஆளை, அரசர்க்கரசர் தூக்கிப் பிடிக்க, ஆசிய ஜோதி நேரு தோளோடு தோள் சேர்த்துத் தோழமை கொண்டாட, டில்லி ஆதிபத்திய அரசிலே முதல்தரமான அரசியல் சந்தர்ப்பவாதியாக வீற்றிருக்கிறாரே நிதி அமைச்சராக டி. டி. கிருஷ்ணமாச்சாரி எனத் திருநாமம் பூண்டு, அவருக்குத்தான் இப்பொழுது, வடநாட்டில் வயிறு பிழைத்துக்கொண்டிருக்கும் ஆறு இலட்சம் 'தமிழர்'கள் மீது கவலை ஏற்பட்டு இருக்கிறது—அதன் காரணமாக மேற்படி கேள்வியையும் கேட்கவேண்டும் என்ற பாசம் பிறந்திருக்கிறது.

அந்த ஆச்சாரியார் 'பச்சைத் தமிழ'ருக்கு அந்தரங்க நண்பராவார். எனவே அவரை ஒரு வகையில் 'காய்ந்தத் தமிழர்' என்றுகூட சிறப்பாகக் குறிப்பிடலாம்.

அந்தக் காய்ந்தத் தமிழர்தான் கேட்கிறார், 'வடநாடு சுரண்டி வாழ்கிறது எனத் திராவிட முன்னேற்றக் கழகம் கூறிவருகிறதே; அதன் விளைவாக வடநாட்டில் இருக்கும் ஆறு இலட்சம் தமிழர்களையும் விரட்டியடிக்க வேண்டும் என்று அங்குள்ளார் முடிவு கட்டிவிட்டால், அந்த ஆறு இலட்சம் தமிழர்களின் நிலை பெழுக்து என்னவது?' என்று!

ஆங்கில நாட்டு வியாபாரிகளின் அடிவருடிக் கொண்டிருப்பதே கட்டை கடைத்தேறுவதற்கான புனித வழி எனத் தனது வாழ்நாளில் பெரும் பகுதியைச் செலவிட்டுவிட்டு, அந்த நாளில் ஆங்கில ஆட்சிக்கு அருந்துணைவனாக இருந்ததால் ஏற்பட்ட குற்றமுள்ள நெஞ்சுக்குச் சாந்தி தேடிக்கொள்ளும் நினைப்புடனுங்கூட, இப்பொழுது அமைச்சர் பதவியில் அடங்கிக் கிடக்கும 'புனித' தேசியத்தைக் காப்பாற்றக் கிளம்பி இருக்கும் இந்தக் காய்ந்தத் தமிழருக்கு, வடநாட்டில் வாழ்ந்துவரும் தமிழ்மக்களின் எதிர்காலம்பற்றி பேசவேண்டும் என்ற நினைப்பு இன்றாவது வந்ததே, அதுவே போதுமானதாகும். அதுவும், வடநாட்டில் வாழும் ஆறு இலட்சம் தமிழர்களுக்காகப் பரிந்து பேசும் வாய்ப்பினை, இந்தக் காய்ந்தத் தமிழருக்கு நமது கழகம் தேடித் தந்துள்ளதற்காக நாமும் மகிழ்கிறோம்.

வடநாட்டில் ஆறு இலட்சம் தமிழர்கள் இருப்பதாக இந்த ஆச்சாரியார் கூறுகிறார். எண்ணிக்கை சரியானதாக இருந்தாலும் இல்லாமற்போனாலும், ஆறு இலட்சம்தமிழர்கள் மீது தமக்கு இருப்பதாகக் காட்டிக்கொள்ளப்படும் அவருடைய பாசம் மெய்யானதாக இருந்தாலும் இல்லாமற்போனாலும், அந்த ஆறு இலட்சம் தமிழர்கள் ஏன் வடநாடு சென்றார்கள்?—செல்ல வேண்டிய அவசியம் அல்லது நெருக்கடி ஏன் அவர்களுக்கு ஏற்பட்டது?—என்பன போன்ற ஐயவினாக்களைக் கிளப்பவேண்டிய கட்டாயத்தில், அவருடைய ஒரு கேள்வி நம்மைத் தள்ளிவிடுகிறது.

இந்த இரு கேள்விகளுக்கும் கண்டிப்பாக விடை கண்டாக வேண்டும்.

ஆறு இலட்சம் தமிழர்கள் ஏன வடநாடு சென்றார்கள்?

ஆதிபத்திய வெறிகொண்டு படை நடத்திச் சென்று, அங்கேயே குடியேறித் தங்கிவிட்டார்களா?

கங்கையில் நீராடி பாவத்தைக் கழுவிக் கொள்ளவும், காசி விஸ்வநாதரைத் தொழுது கைலாயத்தில் இடம் பிடித்துக்கொள்ளவும் இந்த ஆறு இலட்சம் தமிழர்களும் வடநாடு சென்று தங்கிவிட்டவர்களா?

காவி கட்டி, கமண்டலம் ஏந்தி, வியர்த்தால் குளித்து, பசித்தால் புசித்து, களைத்தால் தூங்கி வடநாட்டிற்குப் பெரும் பாரமாக இருப்பவர்களா, இந்த ஆறு இலட்சம் தமிழர்களும்?

இவ்வாறெல்லாம் கூறிவிட, இந்தக் காய்ந்தத் தமிழருக்குத் துணிவும் கிடையாது—வரலாற்றில் சான்றும் கிடைக்காது.

தென்னாட்டில் — திராவிடத்தில் மானத்தோடு வாழ மார்க்கமில்லை—பாடுபட்டு உழைத்துப் பிழைக்க வழியில்லை—உடலுடன் உயிர் ஒட்டிக்கொண்டிருக்கச் செய்ய ஏது இல்லை. எனவே, அமைச்சர் பரிதாபப்படுவதாகக் கூறும் ஆறு இலட்சம தமிழர்களில் பெருந்தொகையினர், தங்கள் உழைப்பை நம்பி பிழைப்புத் தேடி, தங்கள் உடல் தெம்பைத் துணைகொண்டு தொழிற்சாலைகளில் தொழிலாளராவதற்குத் தொழில் தேடி வடநாட்டில் நுழைந்தனர்—ஏதோ வாழ்ந்து வருகின்றனர்.

மீதமுள்ள சிறு தொகையினர், ஆங்கில ஏகாதிபத்தியம் உருவாக்கிய 'ஏக இந்தியா' ஆட்சி அமைப்பின் வலுக்கட்டாயத்தினால், அரசாங்க சேவையில் ஈடுபட வடநாடு சென்றுள்ளனர்.

இங்கே, தென்னாட்டில் தொழில்வளம் அன்றே ஏற்பட்டிருந்தால், இங்கு சுதந்திர தனி அரசு அன்றே அமைந்திருந்தால், இந்த ஆறு இலட்சம் தமிழ் மக்கள், பிறந்த வீட்டை விட்டு, வடநாட்டிற்குக் காலெடுத்து வைத்திருப்பார்களா? நாடு பெயர, அவர்களுக்குத்தான் மனத் துணிவு ஏற்பட்டிருக்க முடியுமா? தென்னகத்தில் ஏற்பட்ட தொழில் தேக்கத்தின் நேர் விளைவாக, வடநாட்டிற்கு மட்டுமா தமிழர்கள் சென்றிருக்கின்றார்கள்? இலங்கை, பர்மா, சிங்கப்பூர், தென்னாப்பிரிக்கா போன்ற கடலுக்கு அப்பாலுள்ள நாடுகளுக்குமல்லவா சென்று சீரழிந்து கிடக்கிறார்கள்?

'ஆறு இலட்சம் தமிழர்கள் வடநாட்டிற்கு ஏன் சென்றனர்?' என்ற கேள்விக்குக் கிடைக்கும் விடையிலேயே, வடநாடு தொழில் வளத்தில் மிகைபட மிகுந்தும், தென்னகம் தொழில் வளத்தில் வரை கடந்து குன்றியும் கிடக்கின்றது என்ற மகத்தான உண்மையல்லவா உள்ளடங்கிக் கிடக்கிறது?

வடநாடு தென்னாட்டைச் சுரண்டிக் கொண்டிருக்கின்றது என நமது கழகம் கூறிவருவதால், வடநாட்டில் வாழ்ந்துவரும் ஆறு இலட்சம் தமிழ் மக்களை விரட்டியடிக்க வடநாட்டினர் துணியக் கூடும் என்றும், அத்தகு நிலை ஏற்பட்டால் ஆறு இலட்சம் தமிழர்களின் எதிர்கால வாழ்வு என்னவது என்றும் பெருங்கவலை கொள்ளுகின்றவர்போல் இந்தக் காய்ந்த தமிழர் அங்கலாய்க்கின்றாரே, இலங்கையில் தொல்லைபட்டுக் கிடக்கும தமிழ் மக்கள் பற்றியும், பர்மாவில் அல்லல் அணைந்துகொண்டிருக்கும தமிழ் மக்கள் குறித்தும, மலாய் நாட்டில் மங்கிக் கிடக்கும தமிழ் மக்கள் பற்றியும இதுவரை இவர் அனுதாபம் காட்டிப் பேசினது உண்டா? அவர்கள் எதிர்காலம பற்றி இவர் இப்பொழுதாவது வெறும விளம்பரத்திற்காகவாவது ஒரு சொல் கூறினதுண்டா?

ஆனால், சிங்கள வெறியர் பண்டாவின் அரசாங்கம தமிழ் மக்களை, ஈவு இரக்கமின்றி சுடடுத் தள்ளியதற்காக இங்குள்ள தமிழ் மக்கள் தங்கள் இயலாமை காரணமாக கண்ணீர் மட்டும சிந்தியது கண்டு, கேலி பேசினார்—நையாண்டி செய்தார். வெந்த புண்ணிலே வேல் பாய்ச்சுவதுபோல் வெடுவெடுப்பாகச் சீறி விழுந்தார், இந்த கிருஷ்ணமாச்சாரியார்!

தமிழர்களுக்கு இத்தகைய துரோகம புரிந்துள்ள இவர்தான், வடநாட்டில் வாழ்ந்துவரும் ஆறு இலட்சம தமிழர்களுக்காக — அதுவும அவர்கள் என்றோ ஒரு நாள் அடையப் போகிறார்கள் எனத் தாமாகக் கற்பித்துக்கொண்ட வேதனைக்காக, இன்று ஒப்பாரி வைக்கிறார். வடநாட்டிலே வாழ்ந்துவரும ஆறு இலட்சம தமிழர்களின் எதிர்காலம என்னவது என்று ஏக்கம கொண்டவர்போல், துக்கம தெரிவிக்கிறார் இந்தக் காய்ந்தத் தமிழர்!

'கம்யூனிஸ்டுகளாகவே இருங்கள்'

'ஆனால், இந்த நாட்டைச் சற்று எண்ணிப்பாருங்கள்'

'மண் வளத்திற்கு ஒப்பத்தானே பயிர் வளரும்?'

காஞ்சி கூட்டத்தில் அண்ணா கருத்துரை

5—2—57 அன்று காஞ்சியில் நடைபெற்ற தேர்தல் கூட்டம் ஒன்றில், அண்ணா அவர்கள் ஆற்றிய கருத்துரையின் ஒரு பகுதி இங்கு தரப்படுகிறது:—

நீங்கள் கம்யூனிஸ்டுகளாகவே இருங்கள்; கால்மார்க்ஸ் போரிலே ஆணை வையுங்கள்; லெனினைப் பஜியுங்கள்; ஓய்வு நேரத்தில ஸ்டாலினைப் புகழுங்கள். ஏதாவது கோபம் வந்தால் அவனுடைய கல்லறையைத் தோண்டி வெளியே போடுங்கள்; அதைப் பற்றி எனக்குக் கவலையில்லை. ஆனால், பிறந்து வளர்ந்த இந்த நாட்டையும் ஒரு கணம் எண்ணிப்பாருங்கள். ஏன் என்றால், எந்தத் திட்டத்தை நீங்கள் புகுத்தினாலும், எப்படிப்பட்ட சமதர்மத்தை நீங்கள் கொண்டு வந்தாலும எத்தகையப் பொதுவுடைமையைக்கொண்டு வந்தாலும் மண்வளத்திற்குத் தக்கபடிதான் திட்டமிருக்கும; மண் வளம சரியாக இல்லாவிட்டால் நல்ல விதை போட்டுவிட்டால் மட்டும போதாது. சந்தேகமிருக்கின்ற தோழர்கள், உதகை மண்டலத்திலேயும பெங்களூரிலும் மட்டுமே பயிராகக்கூடிய சில காய்கறிகளை நமமுடைய தோட்டத்திலே பயிரிட்டுப் பாருங்கள் காய்கறி கிடைக்கும்—ஆனால, மலரிலே மணம இருக்காது; காய்கறிகளில சுவை இருக்காது—அந்த இருப்பதைப்போல!

"அதைப்போலத்தான், இந்த நாட்டில் நீங்கள் பொதுவுடைமைத் தத்துவத்தைப் புகுத்தினாலும், எந்தத் திட்டத்தை நீங்கள் நிறைவேற்றினாலும, இங்கே இருக்கின்ற எனனுடைய மதிப்பிற்குரிய கம்யூனிஸ்டுக் கட்சித் தலைவர் இராமமூர்த்தி அவர்களே இந்த நாட்டுக்கு அதிபரானாலும. மண் வளத்திற்குத் தக்கபடி தான் சமதர்மம் இருக்கும ஆகையினாலேதான் மண்வளத்தைக் கொஞ்சம ஆராய்ந்து பாருங்கள் என்று உங்களிடத்தில் நான் வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன்

"நான் உங்களைப் பழைய தமிழ் நாட்டைப் பார்க்கும்படி அழைக்கிறேன் அந்தப் பழைய தமிழ் நாட்டில், நிலவளமும நீர்வளமும அப்பழுக்கற்ற வகையிலே இருந்திருக்கின்றது. அந்தக் காலத்திலேதான் நம்முடைய நாட்டில் சிலப்பதிகாரத்தை இயற்றினார்கள், பெரும புலவர்கள்! அந்தக் காலத்திலதான் மணிமேகலையை இயற்றினார்கள்! அந்தக் காலத்திலே தான் அகநானூறு புறநானூறு பாடினார்கள்! அந்தக் காலத்திலேதான் தொல்காப்பியத்தைப் பாடினார்கள்! அந்தக் காலத்தில் பாடாத பாட்டு இல்லை! இப்போது தோன்றாத பெரும் புலவன் இல்லை! அதைப்போலவே, அறிவில் சிறந்தவர்கள் இருந்தது மாத்திரமல்ல—வீரத்திலேயும் சிறந்தவர்கள் தமிழகத்தில் ஏராளமாக இருந்தார்கள்!

"இங்கிருந்து கிளம்பிய இராசேந்திர சோழன, பர்மாவரையில் சென்று வெற்றிக்கொடியை நாட்டிவிட்டு வந்திருக்கிறான; இங்கிருந்து கிளம்பிய குலோத்துங்க சோழன்,' இன்றைய தினம் ஒரிசா என்று அழைக்கப்படுகின்ற பழைய கலிங்கத்தை வென்றிருக்கிறான்; அதனைத்தான், 'கலிங்கத்துப் பரணி,' என்று தமிழ்ப் புலவர்கள் பெருமையோடு சொல்லுகிறார்கள் இங்கிருந்து கிளம்பியவர்கள் யவன நாடு வரையிலே வியாபாரம் செய்திருக்கிறார்கள். இன்றையத் தினம் தமிழ் நாட்டினுடைய படத்தை நீங்கள் பூகோள பாடபுத்தகத்தில் பார்த்தால் மூன்று பக்கத்தில் அழகான கடலும் கடலை அடுத்த மலைகளும, மலைகளைத் தாண்டி அழகான சிற்றாறுகளும, பல சிற்றாறுகளுக்கு நடுவே பல பெரிய ஏரிகளும், சிற்றாறுக்கும் ஏரிகளுக்கும் வாழ்வும வளமும் அளிக்கத் தக்க ஆறுகளும ஆறுகளிலிருந்து பிரிந்துச் செல்கின்ற வாய்க்கால்களும், வாய்க்கால்களாலே வளமூட்டப் படுகின்ற வயலும், வயலைக் கட்டிக் காக்கின்ற உழவர்களும், உழவர்களுக்கு மானத்தை மறைத்துக்கொள்ள ஆடை தருகின்ற நெசவாளர்களும, நெசவாளர்களையும் உழவர்களையும் போற்றிப் பாடுகின்ற புலவர்களும்—இப்படியெல்லாம் இருப்பதைப் பூகோளப் படத்தில் இன்றையத் தினம் அமைப்பு வரையிலே பார்க்கலாம. இன்றையத் தினம் புலவர்களுக்கு அந்த நிலை இல்லை எங்காவது சீமான் வீட்டுத் திருமணமானால், மணமக்களை வாழ்த்திப் பாடப் பாடுகின்றார்கள் பழைய காலத்துப் புலவர்கள் அப்படி இருந்தது இல்லை மன்னன் தவறு நடந்தால, புலவன் உள்ளே நுழைந்து சென்று, 'மன்னா, நீ செய்தது தவறு,' என்று கண்டித்து உரைத்திருக்கிறார்கள். எரிக்கும் சிறு கோலிலேதான் உன்னுடைய யானை ஓட்டுகின்ற பெருங்கோல் இருக்கின்றது' என்று புலவர்கள் எல்லாம் வாதாடியிருக்கிறார்கள். இவ்வளவு பழம் பெருமை வாய்ந்த நமமுடைய தமிழகம; இன்றையத் தினம், எதற்கெடுத்தாலும் டில்லி—எந்த அதிகாரமென்றாலும டில்லி—எதற்குத் தொட்டாலும் டில்லி என்று பார்க்க வேண்டியிருக்கின்றதென்றால், எங்களுடைய உடலிலே

(4-ம் பக்கம் பார்க்க)

கொள்கையும் உறுதியும் கொண்ட தி. மு. கழகத் தோழர்கள்

தூற்றுதல்களால் துவண்டு விடுவர் என நினைப்போர் ஏமாற்றமடைவர்

மாற்றாருக்கு அறைகூவல்விடுக்கிறார் பொன்னம்பலனார்

4—2—57 மாலை சென்னை-கொருக்குப்பேட்டையில் நடைபெற்ற தி. மு. கழகத் தேர்தல் பிரச்சாரக் கூட்டத்தில் தோழர் அ. பொன்னம்பலனார் ஆற்றிய சொற்பொழிவின்சாரம் கீழே தரப்படுகிறது.

"தேர்தல்கள் நெருங்கிக்கொண்டிருக்கிற இந்த நேரத்தில மந்திரிகள் நாடு முழுமையிலும் பவனி வருகிறார்கள்; மந்திரிகளாக இருந்து ருசி கண்டவர்களும், இலட்சக்கணக்கில் சம்பாதித்த செல்வந்தர்களாக இன்று உலவுகிறவர்களும் ஓட்டுக்கேட்டு மக்களிடத்தில் வருகின்ற நேரத்தில் திராவிட முன்னேற்றக் கழகமும் தனது கடந்தகால நடைமுறைகளையும் நாட்டுக்குச் சேவைகளையும் அதனால் அடைந்துள்ள இன்னல்களையும் சொல்லி மக்களிடம் வருகிறது.

"இந்த நேரத்தில் பொது மக்களுடைய கடமையெல்லாம், அவரவருடைய தகுதியையும் திறமையையும் மக்கள் பணியையும் கவனித்து வாக்களிப்பதுதான்.

"அதே நேரத்தில் காங்கிரசாருக்கும் 'தி. மு. கழகத்தவரைப் பற்றி காலிகள் என்றும் கூலிகள் என்றும் கண்டகண்ட இடங்களில் எல்லாம் எழுதத் தூண்டி, அதன் மூலம் தி. மு. கழகத்தின் மீது மக்கள் கொண்டிருக்கும் நல்லெண்ணத்தை மாற்றிவிடலாம் என்று நினைத்தால் ஏமாற்றமடைவீர்கள்' என்பதைக் கூற ஆசைப்படுகிறோம்.

"நம்முடைய தோழர்களின் பெயர்களைக் கண்டபடி பேசியிருக்கிறார் ஒரு அமைச்சர். பொறுப்புள்ள மந்திரி ஒருவர் இப்படிப் பொறுப்பற்ற முறையில் பேசுவது நல்லதா? மந்திரிக்கு அழகா?

"இப்படி மந்திரிகளும் மாற்றாரும் தூற்றி வருவதனால் ஒன்றும் கழகம் துவண்டுவிடாது. திராவிட முன்னேற்றக் கழகத்தை எவர் எதிர்த்தாலும் நாங்கள் கவலைப்படவில்லை எங்களிடத்தில் கொள்கை இருக்கிறது; அந்தக் கொள்கையின்மீது உறுதியும் பற்றும் இருக்கிறது. நாடு முழுமையிலும் எங்கள் கொள்கைக்கு ஆதரவு—மாணவர்களிலிருந்து பாட்டாளிகள், ஏழை எளிய மக்கள், தொழிலாளர்கள் அனைவருடைய ஆதரவும் இருக்கிறது.

"மக்கள் அனைவரின் ஆதரவையும் பெற்ற தி. மு. கழகம் சட்டசபைக்குச் சென்றுவிடுவதுடன் மட்டும் தனது பணிகளை நிறுத்திக்கொள்ளாது. சட்டசபைக்கு வெளியேயும் வந்து மக்களிடையே வேலை செய்யும். தி. மு. கழகத்தினர் எக்காலத்திலும் மக்களை மறந்துவிடுபவர்களல்லர்; அவர்கள் சட்டசபைகளில் தூங்குபவர்களுமல்லர். தி. மு. கழகத்தின் கூட்டங்களில் கூடும் மக்களின் கூட்டமும், அவர்கள் காட்டுகின்ற ஆதரவும் பொய்யாக இருந்தால் வேண்டுமானால் நாங்கள் தோல்வியுறுவோம். ஆனாலும், அப்படித் தோல்வி பெற்றாலும்கூட வேறு அரசியல் கட்சிகளுடன் சேர்ந்து பச்சோந்திகளாக மாறிவிடமாட்டோம். எங்களுடைய நடவடிக்கைகள் பத்தினித் தன்மையுடன் அமைந்து, வாழ்க்கையிலும் கம்பீரமாகத் திகழ்வோம். ஆனால், தோற்றுவிடக்கூடாது என்பதற்காகத் தவறான வழிகளில் சென்று ஓட்டுக்களைச் சேகரிக்கப் போவது மட்டும் எங்களிடம் கிடையாது.

"எனவே நேர்மையான வழிநின்று சட்டசபையின் மூலம் தனது கோரிக்கையை எழுப்பி, நாட்டு மக்களுக்கும், நாட்டுக்கும் நன்மை பயக்கும் ஒரே எண்ணத்துடன் தேர்தலில் போட்டியிட இருக்கிற தி. மு. கழகத்திற்கு ஆதரவு தருமாறு கேட்டுக்கொள்கிறேன்"

அரிசி விற்பனையை நிறுத்திவிடுவராம்!

புதிய அறுவடையைக் காரணம் காண்பிக்கிறது சென்னை சர்க்கார்

சென்னை மாநிலத்தில் அறுவடை முழுவேகத்தில் நடைபெற்று வருகிறதாம்!

புதிய அறுவடையின் விளைவாக நியாயவிலைக் கடைகளில் விற்பனை குறையத் தொடங்கி விட்டதாம்!

எனவே, நியாயவிலைக் கடைகளில் அரிசி விற்பனை குறைந்துள்ள பகுதிகளில் அரிசி விற்பனையை நிறுத்திவிட அரசாங்கம் தீர்மானித்துள்ளதாம்.

சென்னை—தியாகராயநகரில் கிளைக் கழக ஆண்டு விழா, தேர்தல் பொதுக்கூட்டம்

தோழர்கள் க. அன்பழகன், பி. பாலசுப்பிரமணியம், ஏ. எஸ். ஜேசுபாதம் கருத்துரைகள்

சென்னை, பிப். 8—

சென்னை தியாகராயநகர் பஸ் நிலையத்தை அடுத்த மைதானத்தில், 47-வது வட்டத் தி. மு. கழக ஆண்டு விழாவும், தேர்தல் பிரச்சாரப் பொதுக்கூட்டமும் சிறப்பான முறையில் நடைபெற்றது.

கூட்டத் துவக்கத்தில், தோழர் இராபர்ட் இரண்டொரு இயக்கப் பாடல்கள் பாடினார்.

கூட்டத்திற்குத் தோழர் பெ. கு. சாமி அவர்கள் தலைமை வகித்தார்.

தலைவர் உரைக்குப் பின் தோழர் சைதை-சம்பந்தம் அவர்கள் சிறிது நேரம் ஆட்சியாளரின் சனநாயக விரோத நடைமுறைகளைச் சுட்டிக்காட்டிப் பேசினார்.

அடுத்து, சென்னை தெற்குத் தொகுதியில், பாராளுமன்றத்திற்குப் போட்டியிடும் தி. மு. கழகத் தோழர் திரு. பி பாலசுப்பிரமணியம் அவர்கள் சிறிது நேரம், தி. மு. கழகத்தின் தேர்தல் ஈடுபாடு, அதன் நோக்கம் குறித்தும் ஆங்கிலத்தில் பேசினார்.

பின்னர், கிளைக் கழகத் தோழர் பழவண்ணன் கிளைக் கழக ஆண்டறிக்கை படித்தார்.

அடுத்து, தோழர் சைதை-அண்ணாமலை சிறிது நேரம் பேசினதும், சென்னை—தியாகராயநகர் தொகுதியில் சட்டசபைக்குப் போட்டியிடும் தி. மு. கழக அபேட்சகர் தோழர் ஏ.எஸ் ஜேசுபாதம் அவர்கள், மாற்றாரின் கடந்த கால அருவருக்கத்தக்க நடவடிக்கைகளைச் சுட்டிக்காட்டி கழகத்தின் தேர்தல் ஈடுபாடு பணத்தை அடிப்படையாகக்கொண்டதாக இராமல், மக்களின் ஆதரவைக் கொண்டதாக இருக்கும் நிலையை விளக்கியும் சொற்பொழிவாற்றினார்.

இறுதியில், தோழர் க. அன்பழகன் அவர்கள் அரியதோர் சொற்பொழிவு ஆற்றினார்.

தலைவர் அவர்களுடைய முடிவுரைக்குப் பின் நன்றி நவிலப்பட்டு இரவு 10 மணியளவில் கூட்டம் முடிந்தது. (ந. கி.)

★★

வடநாடு வாழ்கிறது — வளர்கிறது!
தென்னாடு தேம்புகிறது—தேய்கிறது!

என்று எடுத்துரைத்து வருகிறது

தி. மு. க.

★

'அடுக்குச் சொல் அலங்காரம் சோறு போடுமா?'

என்று கேலி மொழி பேசி வருகின்றனர்

'அகில இந்தியா'க்கள்!

★

ஒரு உழவனின் ஆண்டு வருமானம்:

வடநாட்டில் ரூ. 117! தென்னாட்டில் ரூ. 91!

ஒரு தொழிலாளியின் ஆண்டு வருமானம்:

வடநாட்டில் ரூ. 600! தென்னாட்டில் ரூ. 300!

இந்த சர்க்கார் தரும் புள்ளிவிவரம்

வடநாடு வாழ்கிறது தென்னாடு தேம்புகிறது

என்பதைக் காட்டவில்லையா?

★

அபிவிருத்திக்காகச் செலவு செய்தது:

(நபர் ஒன்றுக்கு)

வடநாட்டில் ரூ. 135! தென்னாட்டில் ரூ. 19!

என்று சி. டி. தேஷ்முக் கூறியிருப்பது

வடக்கு மேலும் வளமாகிறது—வளருகிறது!
தெற்கு மேலும் தேய்கிறது—தீய்கிறது!

என்பதைக் கூறுவதாகாதா?

★

வாக்காளரே! கேலி பேசும் 'அகில இந்தியா'க்களுக்கா உங்கள் ஓட்டு?

★

கண்டனம் முழக்கி, அநீதி அழியப் பாடுபடும்

தி. மு. கழக அபேட்சகர்களுக்கே

வாக்கு அளியுங்கள்!

★★

'மக்கள் சபையில் திராவிட நாட்டுப் பிரச்சினையை எழுப்புவேன்'

சென்னைப் பொதுக் கூட்டத்தில் பி. பாலசுப்பிரமணியம் உறுதிமொழி

8—2—57 மாலை 6 மணியளவில், சென்னை ஆழ்வார்பேட்டையில், தென் சென்னை பாராளுமன்றத் தொகுதியில் தி மு கழக அபேட்சகராகப் போட்டியிடும் தோழர் பி. பாலசுப்பிரமணியம் அவர்களை ஆதரித்து, ஒரு பொதுக் கூட்டம் நடைபெற்றது. கூட்டத்திற்கு தோழர் அகமகிழன் தலைமை வகித்தார். துவக்கத்தில் தோழர் பி. பாலசுப்பிரமணியம் தன்னைப் பாராளுமன்றத்திற்கு மக்கள் தேர்ந்தெடுத்து அனுப்பினால், பாராளுமன்றத்தில் திராவிட நாட்டுப் பிரிவினைப் பிரச்சினையைக் கிளப்புவதாக உறுதி கூறிச் சிறிது நேரம் பேசினார்.

அடுத்து தோழர் ஏ. வி. பி ஆசைத்தம்பி கழகத் தேர்தல் ஈடுபாட்டின் விளைவுகளை விவரித்தும், கழகத் தோழர்களை ஆதரிக்க வேண்டிய அவசியத்தை வற்புறுத்தியும் சிறிது நேரம் பேசினார்.

தி. மு. கழகத் தேர்தல் நிதிக்கென தோழர் ஆசைத்தம்பி அவர்களிடம் கிளைக் கழகச் சார்பில் ரூ. 100-ம், தோழியர் சு. பேபி அம்மையார் அவர்களால் 51 காலணுக்களும், சென்னை மவுண்ட்ரோட் பிச்சைக்காரர்கள் சார்பில் நடைபாதை வியாபாரி தோழர் பரமசிவம் மூலம் 101 தம்பிடியும் அளிக்கப்பட்டது.

இறுதியாகத் தோழர் காஞ்சி-கல்யாணசுந்தரம் அவர்கள் தி மு கழகத்தின் நடைமுறைக் கொள்கைகளை விளக்கிச் சிறிது நேரம் பேசினார்.

பின்னர் தலைவர் முடிவுரையுடன் நன்றி நவிலப்பட்டு கூட்டம் இரவு 9½ மணியளவில் முடிவுற்றது. (ந. கி.)

சென்னை வள்ளுவர் மன்றத் துவக்க விழா

முன்னணித் தோழர்கள் கொள்கை விளக்கம்

சென்னை 31-வது வட்டம் வாதரசபுரம் வள்ளுவர் மன்ற 4-வது ஆண்டு துவக்கவிழா 9-2-57 மாலை 6-30 மணி அளவில் தோழர் சி. ஆர் பாலசுந்தரம் தலைமையில் நடைபெற்றது.

தலைவர் முன்னுரைக்குப் பின்னர் மன்ற ஆண்டறிக்கை வாசிக்கப்பட்டது. அடுத்து தோழர் க அன்பழகன் அவர்கள், தேர்தலில் தி மு. கழக ஈடுபாட்டின் அவசியம் குறித்தும் தி. மு. கழகத்தைப் பொதுமக்கள் ஆதரிக்க வேண்டிய அவசியம் குறித்தும் பேசினார்.

அடுத்து தோழர் அ. பொ. அரசு பல்வேறு போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்குப் பரிசுகள் வழங்கினார்.

பின்னர் தோழர் ஏ. வி. பி. ஆசைத்தம்பி அவர்கள், காங்கிரஸ் ஆட்சியின் அவலநிலை குறித்தும், எதிர்க்கட்சியாகத் தி. மு. கழகம் சட்டசபையில் அமைய வேண்டிய காரணம் குறித்தும் பேசினார்.

இறுதியில் செயலாளர் நன்றி கூறக் கூட்டம் இனிது முடிந்தது.

கூட்டத்தில் மன்றச் சார்பில் தி. மு. கழகத் தேர்தல் நிதியாக ரூ. 50-ம், வெற்றிச் செல்வன் சார்பில் ரூ 1-ம் 'நம் நாடு' வளர்ச்சிக்கு நாகம்மைச் சார்பில் ரூ. 1-ம் 'அண்ணாதுரை' சார்பில் ரூ. 1-ம் அன்பழகன் அவர்களிடம் அளிக்கப்பட்டன. (ந. கி.)

தென்னாப்பிரிக்காவில் ஜோகனஸ்பர்கிலும், பிரிட்டோரியாவிலும் பஸ்களைப் பகிஷ்கரிக்கும் இயக்கம் பரவியதால், பிரயாணிகள் பஸ் போக்குவரத்து 5-சதவிகிதம் குறைந்துவிட்டதாம்.

அண்ணா கருத்துரை.......

(2-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

ஒரு சொட்டு இரத்தம் இருக்கின்ற வரையில், அதை மாற்றுவதுதான் என்னுடைய கடமை. இதிலே எங்களுக்குத் தேர்தல் சாதகமானாலும் பாதகமானாலும் அக்கறை இல்லை.

"மற்றவர்கள், 'அகில இந்தியா' என்கிறார்கள்; நாம் 'தனித் திராவிட நாடு' என்று கேட்கின்றோம். அவர்கள் 'யானைக்குக் கவுன் தைக்க வேண்டும்' என்கிறார்கள்; ஆசையிலே தையற்காரர்களுக்கு ஆசை பிறக்கிறது — 'கவுன் தைத்துக் கொடுக்கலாம்' என்று! நான், 'யானைக்குக் கவுன் தைக்க முடியாதையா; வீட்டிலே இருக்கிற பானையிலே சோறு இருக்கிறதா பார்த்துக் கொள்ளுங்கள்' என்று நாட்டைப்பற்றி எடுத்துச் சொல்லுகிறேன். யானைக்குக் கவுன் தைக்கக்கூடிய சாமர்த்தியமுள்ளவர்கள், தயவு செய்து தைத்துக்கொள்ளட்டும்; ஆனால் நான், பானையில சோறு இருக்கிறதா என்று பசியிலேயும் பட்டினியிலேயும் ஈடுபட்டிருக்கின்ற மக்களிடத்தில் சொல்லுகின்றபோது, 'நீ பானையைப் பற்றிப் பேசினால் என்னுடைய யானை பிரண்டுவிடும்' என்று சொன்னால், அது என்ன யானை? 'அகில இந்தியா' என்று எடுத்துச் சொல்கிறார்களே, அந்த அகில இந்தியா, நான் இப்போது குறிப்பிடுகின்றேனே, பழந் தமிழகம்—சேகிரன் வாழ்ந்த தமிழகம் —அகமும் புறமும் பாடிய காலத்துத் தமிழகம்—சிலப்பதிகாரமும் சீவக சிந்தாமணியும் இருந்த தமிழகம்—அந்தக் காலத்திலே 'அகில இந்தியா' இருந்ததா?

"நமதுடைய மதம், புராணங்களில் எங்காவது நீங்கள் 'இந்தியா' என்று பார்க்கின்றீர்களா? தேவார திருவாசகங்களில் இருக்கின்றதா 'இந்தியா' என்று? திருப்புகழ் காவடிச் சிந்திலாவது பார்க்கின்றீர்களா? இல்லையே! அங்கே நீங்கள் கேட்பதெல்லாம் — சேர நாடு, சோழ நாடு, பாண்டிய நாடு; அதற்கடுத்து பல்லவ நாடு, கொங்கு நாடு; இப்படி நாடுகளைப் பற்றிக் கேள்விப்பட்டீர்களே தவிர, 'இமயம் முதற்கொண்டு குமரி வரையிலே இருக்கின்றது இந்தியா என்று ஒரு நாடு' என்று என்றையத் தினம் நமக்குத் தெரிந்தது? இந்த நாட்டைச் சுரண்டுவதற்கு என்றையத்தினம் வெள்ளைக்காரன் வந்தானோ, அன்றே அவன் தன்னுடைய நிர்வாகச் சவுகரியத்திற்காக, டில்லியிலே கோட்டை கட்டி, பம்பாயிலே இன்னொரு கோட்டை கட்டி, சென்னையிலே வேறோர் கோட்டை கட்டி, கோட்டைக்குக் கோட்டை, கொடி மரத்துக்குக் கொடி மரம், இரும்புச் சங்கிலி போட்டுக் கட்டினான். நீங்கள் ஏன் அந்த அடிமைச் சங்கிலிக்குள் இருக்கவேண்டும் என்று விரும்புகிறீர்கள்? எதற்காக அந்த அடிமைச் சங்கிலியைப் பார்த்து, 'இதுதான் அகில இந்தியா' என்கிறீர்கள்? உண்மையில் நான் உங்களிடத்தில் வேண்டிக் கேட்டுக்கொள்வேன்—திருமண வீட்டிலே கொடுக்கிற சந்தனமானாலும், உடலிலே பூசி, அது நன்கு உலராது கொஞ்சம் அரிப்பு எடுக்க ஆரம்பித்தால் வீட்டிலே வந்து கழுவுகிறோமே! அது சந்தனம்—மணமிருக்கின்றது; அன்போடு கொடுத்தார்கள்; உபசாரத்திற்காக கொடுத்தார்கள்—என்றாலும், பூசி உலர்ந்துவிட்டால் மறுபடியும் துடைத்துவிடுகின்றோமே! சந்தனத்தையே துடைத்து விடுகின்றோமென்றால், வெள்ளைக்காரன் பூசிவைத்த அந்தச் சேற்றிலே இன்றையத் தினம் நின்றுகொண்டு, 'இது எவ்வளவு வாசனை தெரியுமா? இதிலேதான் எனக்குச் சமதர்ம மணம் கிடைக்கிறது;' என்று என்னுடைய கம்யூனிஸ்டு நண்பர்கள் சொன்னால், நான் அவர்களுடைய நாசிக் குறைந்ததைப் பற்றிப் பரிதாபப்படுவதா? அல்லது அவர்களுக்குத் திடீரென்று சேற்றிலே தோன்றிவிட்டக் காதலைப் பற்றிப் பச்சாதாபப்படுவதா?

"ஆகையினால்தான், பழந்தமிழகம் எப்படி டில்லியின் பிடிக்குக் கட்டுப்படாமல், எந்த ஆதிக்கத்திற்கும் உட்படாமல், யாரையும் ஆதிக்கத்திற்குக் கொண்டுவராமல் மற்றவர்களை மதித்து, மற்றவர்களாலே மதிக்கப்பட்டு, மற்றவர்களுக்கு அறிவை ஊட்டி, மற்றவர்களிடமிருந்து அறிவைப் பெற்றுக் கொண்டு, மற்றவர்களிடத்தில் வியாபாரம் நடத்தி, மற்றவர்கள் இங்குவந்து வியாபாரம் நடத்த இடம் கொடுத்து, எப்படி உரிமையிக்க நாடாக வாழ்ந்ததோ, அதைப்போல வாழ்வதற்கு வழி இருக்கிறது—வகை இருக்கிறது என்று திராவிட முன்னேற்றக் கழகம் சொல்கிறது.

"இதை எடுத்துச் சொல்லுவதற்கு ஏற்ற இடங்கள் டில்லி சட்டசபையும் சென்னை சட்டசபையும்தான்."

அண்ணா தொகுதியில்

பொதுச்செயலாளர்

இரா. நெடுஞ்செழியன்

நிகழ்ச்சிகள்

அண்ணா அவர்கள் போட்டியிடுகிற தொகுதியில், 16-2-57 மாலை 6 மணிக்கு, பூந்தமல்லியிலும், இரவு 8 மணிக்கு, பரந்தூர் கிராமத்திலும் நடைபெறும் தேர்தல் பொதுக்கூட்டங்களில் பொதுச் செயலாளர் இரா. நெடுஞ்செழியன் கலந்துகொள்ளுவார்.

சேந்தமங்கலம்

தொகுதி தோழர்கட்கு :

'சேந்தமங்கலம் தொகுதி தி. மு. கழகத் தேர்தல் அலுவலகம் சேந்தமங்கலம் சினிமா தியேட்டருக்கு வடக்கில் அமைக்கப் பெற்றுள்ளதாகையால் தேர்தல் சம்பந்தமாகத் தொடர்புகொள்வோர் இம் முகவரிக்குத் தொடர்பு கொள்ளவும். தொகுதி அபேட்சகர் தோழர் ஜி. பி. சோமசுந்தரம் அவர்களை தினமும் மாலை 6½ மணிக்கு மேற்படி அலுவலகத்தில் சந்திக்கலாம்'

என்று, சேந்தமங்கலம் தொகுதி தி. மு. கழகத் தேர்தல் அலுவலகப் பொறுப்பாளர் ஆறு முத்துசாமி அறிவிக்கிறார்.

அண்ணா

சுற்றுப்பயணம்

பிப். 15: மாலை 6 மணி: திருவண்ணாமலை; இரவு 10 மணி: வாணியம்பாடி;

பிப். 16: மாலை சேந்தமங்கலம் (சேலம்) இராசிபுரம் தொகுதிகளில் பொதுக்கூட்டங்கள்; இரவு 10 மணிக்கு நாமக்கல் 'சந்திரோதயம்'—நாடகம்;

பிப். 17: மாலை திருச்செங்கோடு (சங்ககிரி தொகுதி) பொதுக்கூட்டங்கள். இரவு 10 மணிக்கு ஆத்தூர் (சேலம்) 'சந்திரோதயம்' நாடகம்.

பிப். 18: மாலை 6 மணி: பொன்னேரி. இரவு 9 மணிக்கு, மீஞ்சூர் பொதுக் கூட்டம்.

தேர்தல் கூட்டங்கள்

அவளூர் :

15—2—57 மாலை 6 மணிக்கு, அவளூரில் தோழர் எஸ். கிருஷ்ணமாச்சாரி தலைமையில் நடைபெறும். தோழர் சி. வி. எம். அண்ணாமலை, ஏ. எல். சி. கிருஷ்ணசாமி, எம். கே. அம்பிகாபதி ஆகியோர் பேசுவர்.

புதூர் :

15—2—57 மாலை 4 மணிக்கு, புதூரில் நடைபெற இருக்கும் தேர்தல் கூட்டத்தில் தோழர்கள் ஏ. எல். சி. கிருஷ்ணசாமி, ஆர். ஜார்ஜ், பெ. த. இன்மொழியன் ஆகியோர் பேசுவர்.

விளக்குடி :

16—2—57 மாலை 6 மணிக்கு, விளக்குடி பருத்தித் திடலில், நடைபெறும் தி. மு. கழகத் தேர்தல் பொதுக்கூட்டத்தில் தோழர் கி. மனோகரன் சொற்பொழிவாற்றுவார்.

கட்டிமேடு :

15—2—57 மாலை 6 மணிக்கு, கட்டிமேடு கடை வீதியில் நடைபெறும் தி. மு. கழகத் தேர்தல் பொதுக்கூட்டத்தில் தோழர்கள் அ. மீ. அலி சேக் மன்சூர், ந. தருமலிங்கம், ம. அம்பிகாபதி, செங்குட்டுவன், சிவ. கனகசுந்தரம் ஆகியோர் பேசுவர்.

தி. மு. க. வில்லை (பாட்ஜ்)



அருகில் உள்ள படத்தில் காணப்படும் அளவில், இருவண்ணங்களில் பிளாஸ்டிக் வில்லை(பாட்ஜ்)கள், தி. மு. கழகத் தோழர்களும் ஆதரவாளர்களும் அணிந்து கொள்வதற்கு ஏற்றவகையில் தயாரிக்கப்பட்டிருக்கின்றன.

ஒன்றின் விலை அணா 5.

கழகத் தோழர்கள் உடனே 'பொதுச்செயலாளர் தலைமைக் கழகம், தி மு க. 'அறிவகம்' சென்னை-13' என்ற முகவரிக்கு பணம் அனுப்பிப் பெற்றுக்கொள்ள வேண்டப்படுகிறார்கள்.

—தலைமைக் கழகம் (தி. மு. க.)

கண்ணதாசன்

சுற்றுப்பயணம்

பிப். 14 மாலை 5-மணி: புதூர், இரவு 7-30 மணி: எரியூர்; 15: மாலை 5 மணி: பிரானபட்டி, இரவு 7-30 மணி: கட்டுகுடிப் பட்டி; 16 மாலை 5 மணி: சிறுவயல் இரவு 7-30 மணி: நாச்சியாபுரம்; 17 மாலை 5 மணி: கள்ளம்பட்டி, இரவு 7-30 மணி: கானாப்பூர்; 18 மாலை 5 மணி: திருக்கோட்டியூர், இரவு 7-30 மணி: கண்டரமாணிக்கம்; 19 மாலை 5 மணி: கோட்டையிருப்பு, இரவு 7-30 மணி: கீழச்சிவல்பட்டி; 20 மாலை 5 மணி: செவ்வூர், இரவு 7-30 மணி: காரைக்குடி; 21 மாலை 5 மணி: வேலங்குடி, இரவு 7-30 மணி: திருப்புத்தூர்; 22 மாலை 5 மணி: புதூர், இரவு 7-30 மணி: கரிசல்பட்டி; 23 மாலை 5 மணி: பட்டமங்கலம், இரவு 7-30 மணி: செயங்கொண்டான் நிலை.

சுற்றுப்பயணத்தில் தோழர்கள் எஸ். எஸ் தென்னரசு, அ குருசாமி, பெரி. அழகு ஆகியோரும் கலந்து கொள்வர்.

தேர்தல் கூட்டங்கள்

★

சென்னை—வண்ணை :

15—2—57 மாலை 6 மணிக்கு, சென்னை—வண்ணை எம். சி ரோடு அருகிலுள்ள நாராயணப்ப நாயக்கன் தோட்டத்தில், வடசென்னை பீடித் தொழிலாளர்கள் சார்பில், தோழர் என். சீவரத்தினத்தை ஆதரித்து, தோழர் ஏ. அப்பாதுரை தலைமையில் கூட்டம் நடைபெறும். தோழர்கள் ஏ.வி.பி. ஆசைத்தம்பி, க. அன்பழகன், ஏ. கே. வில்வம், எஸ். பி. டி. திராவிடமணி, இரா. இலக்கியச் செல்வன், பி. எஸ். மணி தோழியர்கள் சத்தியவாணி - முத்து, ஜி. பி. அமுதா ஆகியோர் பேசுவர்.

சென்னை—பூங்கா நகர்

15—2—57 மாலை 6 மணிக்கு, சென்னை 27-வது வட்டத் தி. மு. கழகச் சார்பில், பேசின் பிரிட்ஜ் தொகுதி அபேட்சகர் தோழர் என்.வி. நடராசன் அவர்களை ஆதரித்து, தோழர் ஆ. இராசன் தலைமையில், சென்னை ஒற்றைவாடை தியேட்டருக்கு எதிரில் ஏலகந்தப்பன் தெருவில், தேர்தல் பொதுக்கூட்டம் நடைபெறும். நடிப்பு - இசைப் புலவர் கே. ஆர். இராமசாமி, தோழர்கள் முகவை-ஆர்.எஸ். பாண்டியன், சுரதா, கருணாகரன் (செலுங்கு) பேசுவர்.

மு. கருணாநிதி

சுற்றுப்பயணம்

பிப். 14: பழைய செயங்கொண்டம்; 15: வெள்ளி அணை; 16: அரவக்குறிச்சி தொகுதிக்கூட்டம்; 17: மகாதானபுரம்; 18: வெள்ளக்கோயில் (நாமக்கல் தொகுதி); 19: ஈரோடு; 21: சமயபுரம் (திருச்சி பார்லிமெண்ட் தொகுதி); எதுமலை (லால்குடி தொகுதி); 22: முசிறி தொகுதி; 23: கணியூர் (உடுமலை தொகுதி); 24: சேலம்; 25 மாலை 5 மணி: வண்டிப்பாளையம் (கடலூர்); இரவு 7 மணி: செம்மண்டலப்பாளையம் (கடலூர்); இரவு 8-30 மணி: நெல்லிக்குப்பம்; இரவு 10 மணி: ராம்பாக்கம் (வளவனூர் தொகுதி); 26: காட்டுமன்னார்குடி; 27: திருக்கோவிலூர் தொகுதி, திருவாடானை தொகுதி; மார்ச் 1: வாணியம்பாடி.

கி. மனோகரன்

சுற்றுப்பயணம்

நாகப்பட்டினம் பாராளுமன்றத் தொகுதியில் போட்டியிடும் தோழர் நாஞ்சில் கி. மனோகரன் அவர்கள் கீழ்க்கண்டவாறு, தேர்தல் பொதுக்கூட்ட நிகழ்ச்சிகளில் கலந்து கொள்வார்.

பிப்ரவரி 12, 13, 14—மாயூரம் தொகுதி; 15, 16, 17—திருத்துறைப்பூண்டி தொகுதி; 18, 19, 20, 21, 22, 23—நாகப்பட்டினம், நன்னிலம் தொகுதிகள்; 24, 25—மன்னார்குடி தொகுதி. தோழர் மனோகரனுடன் தொடர்பு கொள்ள விரும்புவோர் 'திராவிட முன்னேற்றக் கழகம், நாகப்பட்டினம்' என்ற முகவரிக்கும், டெலிபோன் எண் 48-க்கும் தொடர்பு கொள்ளலாம்.

சேதி, கேட்டீரா?

'சேரிகள்' என்று இனி, சர்க்கார் தஸ்தாவேஜுகளில் எழுதக்கூடாதாம்.

சேரி' என்பதற்குப் பதிலாக இனி 'காலனி' அல்லது 'குடியிருப்பு' என்று எழுத வேண்டுமாம்—சர்க்கார் உத்தரவு பிறப்பித்திருக்கிறது.

'சேரிகள்' என்று அழைக்கப்படுவது சர்க்காருக்கு இப்போதுதான் வெட்கம் பிறந்திருக்கிறது போலும்!

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம்.ஏ. அவர்களால் அறிவகம் அச்சகத்தில் அச்சிடப்பெற்று, (24, சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம் சென்னை) வெளியிடப் பெறுகிறது. ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன்

★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★

காஞ்சியில் எம்.ஜி.ஆர். நாடகங்கள்

16-2-57 சனி இரவு 10-மணிக்கு

காஞ்சி நகர மன்றத்திற்கு எதிரிலுள்ள

திறந்த வெளி அரங்கில்

★

புரட்சி நடிகர் **எம். ஜி. இராமச்சந்திரன்**

& குழுவினர் நடிக்கும்

இன்பக் கனவு

நாடகம் நடைபெறும்

★

17-2-57 ஞாயிறு இரவு 10-மணிக்கு

சுமைதாங்கி

நாடகம் நடைபெறும்

கட்டணம்: ரூ. 3, 2, 1. பெண்களுக்குத் தனி இடம் உண்டு

இரு தினங்களுக்கு முன்பே கண்ணன் லாரி சர்வீசில் டிக்கெட்டுகள் கிடைக்கும்.

தி. மு. க. அபேட்சகர்களுக்கே வாக்களியுங்கள்!